விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 22 ஜூலகம் 8 இதழ் 173
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6-8-84

மீனம்பாக்கம் சம்பவம்:

# சென்னைப் பொலிஸார் துப்புத் துலக்கினர்

(சென்னை)

கடந்த வியாழக்கிழமை சென்னைமீனம்பாக்கம் விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக சென்னைப்பொலிசார் துப்புத்துலக்கியுள்ளனர்.

கொழும்பு செல்வதற்காக 'ஏயர் லங்கா' விமானத்தில் ஆசனத்தை பதிவுசெய்துவிட்டு இரு சூட்கேஸ் பெட்டிகளுக்கும் கட்டணத்தைச் செலுத்திவிட்டு இறுதிநேரத்தில் பயணம் செய்யாது விட்ட மர்ம மனிதர் கதிரேசன் என்பவரின் வீட்டைப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கிராமமொன்றிலேயே இவரின் வீடு இருப்பதைப் பொலிசார் கண்டுபிடித்தனர்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான குற்றவாளியை விரைவில் கண்டுபிடிக்க முடியுமென சென்னைப் பொலிசார் தெரிவித்தனர். (வெ)

# ஒட்டுசுட்டான் பொலிஸ்நிலையம் தாக்கப்பட்டது!

## 2 பொலிஸார் பலி; பலர் படுகாயம் !!

### 60 பேர் கொண்ட கோஷ்டியின் தாக்குதல்

(கொழும்பு)

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையம் நேற்று 60 பேர் கொண்ட கோஷ்டியொன்றினுல் தாக்கப்பட்டது. இச்சம்பவத்தின்போது இரு பொலிசார் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர். இதனையடுத்து ஒட்டுசுட்டான் பகுதியில் ரோந்து நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதிகளால் வந்த வாகனங்கள் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன.

அதேசமயம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பயங்கரவாதிகள் நேற்று ஆயுதப்படையினருக்கு எதிராகப் பரவலாகத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாகவும், தற்போது நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுவிட்டதாகவும் ராஜாங்க அமைச்சு தெரிவித்தது.

குண்டுவெடிப்புச் சம்பவம்:

## உதவிப் பொலிஸ்அதிபர் பலி! ஐவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டியில் நேற்றுக் காலை நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில், உதவிப்பொலிஸ் அதிபரும், பலாலி இராணுவ முகாம் இணைப்பு அதிகாரியுமான சிறி ஜெயசுந்தர (42 வயது) பலியானுர், இச்சம்பவத்தில்5 ஆயுதப் படையினரும் காயமடைந்தனர்

ஜீப் வண்டியில், வல்வெட்டித்துறைப் பகுதியில், ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இக் குண்டுவெடிப்புச் சம்பவம் நடைபெற்றது.

ஜீப்வண்டி, பொலிகண்டி பகுதியில் ஆயுதப் படையினர் இணைப்பு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது திடீரென்று பலத்த சத்தத்துடன் குண்டுவெடித்ததாகவும் கூறப்படுகிறது.

காயமடைந்த 5 ஆயுதப் படையினரும், உதவிப் பொலிஸ் அதிபரின் சடலமும் யாழ்.ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டது.

காயமடைந்தவர்களுக்கு உடனடியாகவே அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

பது[illegible]யைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அதிபர் ஜெயசுந்தராவின் சடலம் அவரது சொந்த ஊருக்கு நேற்றிரவு அனுப்பிவைக்கப்பட்டது. (க)

## 'வீடியோடெக்' துப்பாக்கி இளைஞரால் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் நிறுவனமொன்றில் சுமார் 15, 000 ரூபா பெறுமதியான வீடியோ டெக் ஒன்று நேற்று துப்பாக்கி இளைஞர்களால் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

நான்கு இளைஞர்கள் நேற்று முன்தினமிரவு காவலாளியை பயமுறுத்தி கொள்ளையை நடத்தியுள்ளதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (க)

## வங்கிக் கிளையில் துப்பாக்கிகள் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மக்கள் வங்கி கிளையில் நேற்று நண்பகல் மூன்று துப்பாக்கிகள் கொள்ளையடிக்கப்பட்டதாகபொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வங்கிக்கு வந்த இளைஞர் கோஷ்டியொன்று, வங்கியிலிருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் மூன்றுதுப்பாக்கிகளை கொள்ளையடித்துச்சென்றதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (க)

## யாழ். நகரை நடுங்கவைத்த குண்டுவெடிப்புச்சம்பவங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாக நேற்றுமாலை வாகனங்களுக்கு குண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்து சுமார் இருமணி நேரம் யாழ்நகர் முழுவதும் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது.

தாதிகள் பயிற்சிக் கல்லூரி மேல்மாடி கண்ணாடி யன்னல் சுவர் எல்லாம் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்துள்ளன.

மேல்மாடியில் அந்நேரம் சில தாதிகள் இருந்தபோதிலும், எவருக்கும் காயம் ஏற்படவில்லை. எல்லோரும், ஆஸ்பத்திரிக்கு ஓடிவிட்டனர். தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாக உள்ள மின்சார 'வயர்கள்' யாவும் அறுந்து தொங்கிக்கொண்டிருக்கின்றன.

யாழ். அரசினர் ஆஸ்பத்திரி சுவர் எல்லாம் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்த அடையாளம் காணப்படுகிறது. பெரிய கடைப்பகுதியில், மடிக்கும் இரும்புக் கதவுகளையும் துப்

(8-ம் பக்கம் பார்க்க)

மீனம்பாக்கம் குண்டுவெடிப்பு:

# ''ஏதோ ஒரு சக்தி என்னைத் தூக்கி எறிவதை உணர்ந்தேன்!

## காயமடைந்தவரின் அனுபவம்

சென்னை, ஆக 6.

''குண்டு வெடிப்புச் சம்பவத்தை எப்ப வர்ணிப்பதென்று புரியவில்லை. என்னைச் சுற்றிரக் கண்ணாடிகள் நொருங்கிச் சிதறும் சத்தம் பலமாகக் கேட்டது. ஏதோ ஒரு சக்தி என்னைத் தூக்கி எறிவதை உணர்ந்தேன்.''

இவ்வாறு மீனம்பாக்கம் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது அங்கு நின்ற ஜூதாலர் என்ற விறகு விற்கும் நபர் ஒருவர் தெரிவித்தார். இவர் அச்சம்பவத்தின் போது தமது காலில் கூரான கண்ணாடித்துண்டொன்றினுல் ஏற்பட்டகாயத்துக்கு சென்னை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவருகிறுர்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை மீனம்பாக்கம் குண்டுவெடிப்புச் சம்பவத்தை நேரடியாகக் கண்டவர்கள் சிலரை பேட்டிகண்டு தகவல்களை வெளியிட்டிருந்தது அவற்றில் ஒன்றே மேற்கண்ட பேட்டியாகும்.

பேட்டிகளில் தெரிவிக்கப் பட்டுள்ள விபரங்கள் வருமாறு:-

''ஜூதாலர் ஒரு விறகு விற்பவர், இவர் குண்டு வெடிப்புக்குச் சற்று நேரத்துக்கு முன்னரே விமான நிலை வெளிநாட்டுப் பயணிகள் கூட்டத்தினுள் நுழைந்துள்ளார். பின்னர் கதிரையொன்றில் இருக்கச் சென்றபோதே குண்டு வெடித்தது.

''தாமும் தமது சகாக்கள் மூவரும் வெகுதூரம் தூக்கி வீசப்பட்டதாகக் கூறும் .வர் தமது காலினுள் ஆழமாக குத்தி நின்ற கூரிய நீண்ட கண்ணாடித் துண்டொன்றையும் பேட்டி கண்டவர்களிடம் காண்பித்தார்.

''தமது நண்பரொருவரை வரவேற்கச்சென்ற நித்திய மூர்த்தி என்பவர் கூறியதாவது;

''விமான நிலைய நுழைவுச் சீட்டைப் பெற்றுக்கொண்டு 11 மணியளவில் உள்ளே சென்றேம் சற்று நேரத்தில் முழுக்கட்டிடமும் இடிந்து விழுவதுபோன்ற உணர்வு ஏற்பட்டது'' என்றுர், பெரும் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறுர்.

(8ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த இராணுவத்தினர் கொழும்புக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்ட 5 இராணுவ வீரர்களும் நேற்றிரவு பலத்த பாதுகாப்புடன் கொழும்புக்குக்கொண்டு செல்லப்பட்டனர். [க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வல்வெட்டித்துறையில் காங்கேசன்துறை வீதியில் ஆலடிக் கருகாமையில் நன்நீர் மின்சாரம் சகல வசதிகளுடன் 5 பரப்புக்காணியுடன் வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; K. சங்கரப்பிள்ளை ஆலடி. K.K.S Road. வல்வெட்டித்துறை. 1238

BAIRAHA FARMS HISEX வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 13ந், 20ந் திகதிகளில் விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். 1244

யாழ்ப்பாணம் (Town) காங்கேசன்துறை வீதியில் மேல் மாடியுடன் கூடிய வியாபாரக் கட்டிடம் உடனடியாக விற்பனைக்குண்டு. எந்த விதமான வியாபாரம் செய்வதற்கும் உகந்தது. விண்ணப்பிக்கவும் விளம்பர இல; 1248 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1248

நெற்குற்றும் இயந்திரங்கள் அரைக்கும் இயந்திரங்கள், மோட்டார்கள், மின்சார உபகரணங்கள் உட்பட கிறைன்டிங் மில் விற்பனைக் குண்டு. நேரில் வரவும் V.S. நடராசா, நீர்வேலி சந்தி. 1246

North town Chicks, Cross Broilers-4-50. சேவல் குஞ்சு-1-65, பேட்டுக்குஞ்சு வெள்ளை, சிவப்பு-8-75. நாலு நாள், கிழமைக்குஞ்சுகளும் ஓடருக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: ராதாகிஷ்ணாஸ், 392, நாவலர் வீதி, கயிலாச பிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம். 1190

கமறாக்கள் - றேடியோக்கள் - சகலவித தளபாடங்கள் - கார் சீற் கவர்கள் - அலுமாரிகள் - சைக்கிள்கள் - ICMA புத்தகங்கள் - கடிகாரவகைகள் - இன்னும் அநேக பொருட்கள். விபரங்களுக்கு முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும்: கார்த்திகேசு, ஏல விற்பனை நிலையம், கோப்பாய். (1189)

## தேவை

நியூ ஜேர்சி (New Jersey) அமெரிக்காவில் வைத்திய தம்பதியினரின் இரு பிள்ளைகளைப் பார்ப்பதற்கு பெண் உதவியாளர்கள் தேவை. வயது 45, ஓரளவு ஆங்கிலம் பேசும் அறிவு விரும்பத்தக்கது. எதிர்பார்ப்புக்களுடன் உடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல; 1236 மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம். 1236

வீடியோ கமிராவினால் படப்பிடிப்புகள் செய்ய நன்கு அனுபவமுள்ள ஒரு கமிராமென் (Camera men) தேவை. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். 12-8-84 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். சினிஸ்ரார் வீடியோ கிளப் சன்லைட் றைக்கிளினேர்ஸ் 23, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1242

நன்கு அனுபவமும் திறமையும்வாய்ந்த ரெயிலர் தேவை. தொடர்புகொள்ளவும்: சோபிதாஸ் ரெக்ஸ்ரைல்ஸ், பருத்தித்துறை வீதி, ஆவரங்கால், 1230

## தேவை

கொழும்பில் பயிற்சிபெறவும் பின் உடைகள் ஏற்றுமதி செய்யும் தையல் நிலையத்தை பொறுப்பேற்று நடத்தவும் திறமையுள்ள இளம்பெண் தேவை. சகல விபரங்களையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 1185, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1185

ஸ்ரான்லி வீதியிலுள்ள வியாபார ஸ்தாபனத்திற்கு அனுபவமும், கல்வித்தகைமையும் உள்ள முழுநேர கணக்கப்பிள்ளை தேவை. வயது 45க்கு மேல். 15-8-84க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 1199, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1199

## வகுப்புக்கள்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுக்குரிய வெல்டிங், வயரிங், மோட்டர் மெக்கானிச வகுப்புகள் ஆரம்பமாகின்றன. J.E.C, 33, பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம். 1167

## தேவை

கைதடியிலிருந்து இயக்கச்சிக்கு கண்ட கல்லு ஏற்றிப் பறிப்பதற்கு லொறி தேவை. நேரடித் தொடர்பு கொள்ளவும்.

**எம். றொபேட்ஸ்,**
**84, பாலைஉடையார்வீதி,**
**குருநகர்,**
**யாழ்ப்பாணம்.**

[1229]

காரைநகர் ப.நோ கூ சங்கம்

## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

## அறிவித்தல்

5000 வெறுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு உண்டு. 16-8-84 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளக் கொள்ளப்படும். மீளப்பெறும் வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்த வேண்டும். நிபந்தனைகளையும் விபரங்களையும் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் யாவும் தலைவர், ப. நோ. கூ சங்கம், காரைநகர் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இக் கேள்விப் பத்திரம் சங்கத்தால் நிராகரிப்பதற்கு உரிமையுண்டு.

குறிப்பு:-
காரியாலயத்தில் ரூபா இரண்டு செலுத்திக் கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்**
ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர்

2-8-84 1208

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றசுப்பையா சிவசுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
சுப்பையா சிவசுப்பிரமணியம் கைம்பெண் பூமலர் அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

மனுதார்

மரணசாதன நிய்யாயாதிக்கம் இல. 206

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3 ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
**ஆழ்வார் சிவபாதசுந்தரம்,**
பதிவாளர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 3-ந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது
**செ. இராமலிங்கம்,**
மனுதாரின் சட்டத்தரணி,

(1151)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற, புத்தூர் மேற்கு, இராசரத்தினம் துரைசிங்கம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்
இராசரத்தினம் துரைசிங்கம் கைம்பெண் சரஸ்வதி, புத்தூர் மேற்கு, புத்தூர்.

—மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 3819

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ஆந் நாளன்று முற்பகல் 9.30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**கு. குலசிங்கம்,**
பதிவாளர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 23ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது.
**இ. இராமலிங்கம்,**
மனுதாரின் சட்டத்தரணி.

1150

## ஏல விற்பனை

**யாழ்மாவட்ட அபிவிருத்திச் சபை**
**கச்சாய் உப அலுவலகம்**

1984-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ம் திகதி முற்பகல் 10-00 மணிக்கு 255 கிலோ நிறையுள்ள பழைய பத்திரிகைகள் மேற்படி உப அலுவலக நூல் நிலையத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

விற்பனையின் பின் உடனடியாக பணம் செலுத்தி பத்திரிகைகள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

பத்திரிகைளை வேலை நாட்களில் நூல் நிலையத்தில் பார்வையிடலாம்.

**எஸ்.ரி.குணநாயகம்**
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

யா/ அபிவிருத்திச் சபை,
கச்சாய் உப அலுவலகம்,
கொடிகாமம்
3-8-1984 1224

## பந்தோபஸ்து நடவடிக்கை

[கொழும்பு]

கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் அதன் சுற்றுப்பகுதிகளிலும் கடும் பந்தோபஸ்து நடவடிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கிளை அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கிளிநொச்சி மாவட்டத்திற்கென கிளிநொச்சியில் கிளை அலுவலகம் ஒன்றை அமைக்கவுள்ளது.

இக் காரியாலயம் யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. பொ. இராமநாதனின் நிர்வாகத்தின் கீழ் இயங்கவுள்ளது. இதற்கு பொறுப்பாக யாழ்மாவட்ட மேலதிக முகாமையாளர் திரு. த. பூ. முருகையா கடமையாற்றுவார்.

இக் காரியாலய அமைவால் கிளிநொச்சி பாவட்ட மக்கள் தமது தேவைகளை சுலபமாக்க உதவியாகவிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

## வீடு / காணி விற்பனவு

யாழ். பழைய பூங்கா வீதிக்கு அண்மையாக 2½ பரப்பில் ஒரு புதிய வீடு.

யாழ்ப்பாணம் கண்டி வீதி முகப்புடன் 5 பரப்பு காணி.

விபரங்களுக்கு:-

**JAFFNA PROPERTY TRADES LTD.,**
**3, நவீன சந்தை (மேல்மாடி)**
**யாழ்ப்பாணம் — போன். 23698**

## விசேஷ ஆங்கில வகுப்பு

**ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்கு**

குறுகிய காலம் தீவிர பயிற்சி
7 - 8 - 84 செவ்வாய் காலை 9 மணிக்கு
**ஆசிரியர்: K. சபாநாயகம்**

★ A/Level London Class
★ Spoken English

ஆண் பெண் இருபாலாருக்கும் தனித்தனி வகுப்புக்கள்
சு. பாலசுப்பிரமணியம்,
யாழ்.கல்வி நிலைய கட்டிடமேல்மாடி,
(சாந்தி தியேட்டர் அருகாமை)
யாழ்ப்பாணம். 1245

## யாழ்ப்பாண பிரயாணிகளுக்கு ஓர் நற்செய்தி

**சிலோன் கரியஸ் லிமிட்டெட்**
**(CEYLON CARRIERS Ltd.) ஸ்தாபனத்தார்**

புதிய பஸ் சேவையை ஆரம்பித்துள்ளார்கள் கொழும்பு செல்லும் பிரயாணிகள் உங்கள் ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

**கட்டணம் — ரூபா 100/-**
**புறப்படும் நேரம் — மாலை 6-30**

**அஜந்தா பஸ் புக்கிங் சென்ரர்**
61, ஆஸ்பத்திரி வீதி,
C. S. K. சந்தி,
யாழ்ப்பாணம்.
குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் 1247

## அகதிகளுக்குப் புனர்வாழ்வு

யக்கச்சி சந்திக்கருகாமையில் அமைந்த வீட்டுத் திட்டத்தில் குடியிருப்பதற்கு ½ஏக்கர் காணியும் இரண்டு அறைகள் கொண்ட கல்வீடும் தெரிவாகும் குடும்பங்களுக்கு கொடுக்கப்படும். தெரிவாகும் குடும்பங்களுக்கு சுயதொழில்செய்வதற்காக ரூபா 10,000 வரை கடனுதவியும் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் உதவிபெற விரும்பும் அகதிகள் கீழ்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி
வை. எம். சி. ஏ.
1219 யாழ்ப்பாணம்.

# மீனம்பாக்கம் இன்று முதல் மீண்டும் இயங்க ஆரம்பிக்கின்றது!

## இறந்தோரின் சடலம் சென்னையில்தகனம்!

(சென்னை)

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையம்மீண்டும்இன்று முதல் இயங்க ஆரம்பிக்கின்றது. கடந்த வியாழக்கிழமை இரவு இங்கு இடம்பெற்ற பயங்கரக் குண்டுவெடிப்பையடுத்து விமானச்சேவைகள் யாவும் கடந்த நான்கு தினங்களாக ரத்துச்செய்யப்பட்டிருந்தன.

இவ் விமான நிலையத்தில் குண்டுவெடிப்பினுல் சேதமடைந்த வெளிநாட்டுப்பயணிகள் தங்கும் கட்டிடத்தின் இடிபாடுகளை அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்துவிட்டன.

மீண்டும் சர்வதேச சேவைகள் ஆரம்பமாகவிருப்பதையடுத்து வெளிநாட்டுப் பயணிகளின் நலன்கருதி தற்காலிக தங்குமிடமொன்றும், சுங்க அலுவல் பகுதியொன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் கூடுதல் பாதுகாப்பும் இவ் விமானநிலையப் பகுதியில்போடப்பட்டுள்ளன. பயணிகளின் பொதிகள், உடமைகள் என்பன தீவிர பரிசோதனைக்குட்படுத்தப்படவுள்ளன.

இவ்விமானநிலையக் குண்டு வெடிப்புக் குறித்து நேரடியாக வந்து நிலைமைகளை ஆராய்ந்த மத்திய சிவில் விமானப்போக்குவரத்து இணை அமைச்சர் திரு. குர்ஷித் அலாம்கான் நேற்றுமுன்தினம் புதுடில்லி திரும்பினுர். இவர் லோக்சபாவில் இக் குண்டு வெடிப்புக் குறித்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார்.

தமிழ்நாடுபொலிஸாருடன், இந்திய சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனமும் கூட்டாக மீனம்பாக்கம் சம்பவம் பற்றி விசாரணைகளை நடத்திவருகின்றது.

இதேவேளை மீனம்பாக்கம் குண்டுவெடிப்பில் இறந்த இலங்கையர்களின் சடலங்கள் இன்று சென்னையில் தகனஞ் செய்யப்படவிருக்கின்றன. இவை மிகவும் உருக்குலைந்த நிலையில் இருப்பதால் இலங்கைக்கு இவற்றை அனுப்புவது சாத்தியப்படாத தாலேயே சென்னையில் இவை தகனஞ் செய்யப்படுகின்றன. சென்னையிலுள்ள இலங்கைத் துணை ஸ்தானிகராலயமும், தமிழக அரசும் இணைந்து இச் சடலங்களின் இறுதிச்சடங்கு ஏற்பாடுகளைக் கவனித்துவருகின்றன.

காயமடைந்த நிலையில் சென்னை மருத்துவநிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களையும் இலங்கை ஸ்தானிகராலயம் கவனித்து வருகின்றது.

தமிழக அரசு இக் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் நஷ்டஈட்டுத்தொகை விபரத்தை வெளியிட்டுள்ளது.

இக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட 3 சுங்க அதிகாரிகளின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் வழங்கப்படும். பணியாளர் குடும்பங்களுச்கு தலா 20 ஆயிரம் வழங்கப்படும். படுகாயமடைந்தவர்களுக்கு தலா பத்தாயிரமும், சிறுகாயமுற்றவர்களுக்கு தலா 5 ஆயிரமும் வழங்கப்படும். (கி)

## டெக்ஸாஸ் தென்பகுதியில் மசகுஎண்ணெய்ப் படிவுகள்

### மீன்பிடி வனப்பகுதி பாதிப்பு

வாஷிங்டன், ஆகஸ்ட் 5

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தின் தென்பகுதிக் கரையோரம் பாரிய மசகு எண்ணெய்க் கசிவினுல் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல் ஒன்று கரீபியன் கடல்பகுதியில் மூழ்கிக் கொண்டிருப்பதனுல் இதில் இருந்து வெளியாகும் மசகு எண்ணெயே டெக்ஸாஸ் தென்பகுதி கரையோரத்தில் படிந்து வருகின்றது.

இம் மசகு எண்ணெய் மிக நீண்ட தூரத்துக்கு இக் கரையோரப்பகுதியில் படிந்துவருவதனுல் இப் பகுதியை அடுத்துள்ள வனவிலங்குப் பாதுகாப்பும் பிரதேசங்களும், மீன்பிடி இடங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜுலை 13ம் திகதி முதல் இவ் எண்ணெய்ப் படிவுகள் கரையொதுங்க ஆரம்பித்தன. டெக்ஸாஸ் மாநில அரசு இப் படிவுகளை அகற்றும் பணியை ஆரம்பித்துள்ளது. பல இயந்திர சாதனங்கள் இதற்கெனப் பயன்படுத்தப்படுகின்றன. (கி)


PHOTO STAT

ஹோம் பினன்ஸ் கொம்பனியின்

மற்று மொரு சேவை

தெளிவான பிரதிகளுக்கும்

பெரிதுபடுத்தல், சிறிதுபடுத்தலுக்கும்
(ENLARGEMENT, REDUCTION)

ஹோம் கொப்பியேஸ்
(HOME COPIERS)

போட்டோ ஸ்டாட்டை நாடுங்கள்.

கன்னதிட்டி சந்தி, கஸ்தூரியார் வீதி

ஹோம் பினன்ஸ் கொம்பனி

82, கன்னதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24310



முக்கிய பிரச்னை!
கையில்
போதியபணமில்லை!
ஆனலும்
அவருடன் உடன்
தொடர்பு
கொள்ளவேண்டும்

ஏன் இந்த மனக்கவலை?

யூனிவேர்சல் ரெலெக்ஸ்

கைகொடுக்கிறது!

536(288) ஆஸ்பத்திரி வீதி
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 23100, 23006


## ★ ஒலிம்பிக்

### ஆஸ்திரேலியா வெற்றி



இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒலிம்பிக் ஹாக்கிப் பந்தயத்தில் ஆஸ்திரேலியா 4-2 என்ற ரீதியில் வெற்றி பெற்றது.

இதனையடுத்து ஆஸ்திரேலியா ஹாக்கி அரை இறுதி ஆட்டத்துக்கு எட்டுப் புள்ளிகளுடன் தகுதி பெற்றுள்ளது.

இந்தியாவின் ஹாக்கிப் புள்ளி எண்ணிக்கை தொடர்ந்து ஆருகவே இருந்து வருகின்றது. நேற்று இடம்பெற்ற வேருெரு ஆட்டமொன்றில மே. ஜெர்மனி மலேஷியாவை 5-0 என்ற ரீதியில் வெற்றி பெற்றது இதனையடுத்து மே. ஜெர்மனியும் ஆறு புள்ளிகளுடன் இந்தியாவோடு சரிசமனுக நிற்கின்றது.

ஆஸ்திரேலியாவே தற்போது முன்னணியில் நிற்கின்றது. இரண்டாவதாக இந்தியாவும் மே. ஜெர்மனியும் காணப்படுகின்றன.

### குதிரைகள் விற்பனைக்கு

ஒலிம்பிக் குதிரைப் பந்தயங்களுக்கெனக் கொண்டு வரப்பட்ட சில குதிரைகள் விற்பனை செய்யப்பட விருக்கின்றன.

நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நா களிலிருந்து பங்கு கொண்ட அணிகளே இக் குதிரைகளை லாஸ் ஏஞ்சல்ஸ் கொண்டு வந்தன. இவற்றை மீண்டும் தமது நாடுகளுக்குக் கொண்டு செல்வதில் ஏற்படும், அசௌகரியம், மற்றும் செலவீனங்கள் காரணமாகவே லாஸ் ஏஞ்சல்ஸில் இவற்றை அந்நாடுகள் விற்க முடிவு செய்துள்ளன.

இதே வேளை தனிநபர் குதிரைப் பந்தயமொன்றில் நியூஸிலாந்தும், குழுப் பந்தயமொன்றில் அமெரிக்காவும் தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளன. ஆஸ்திரேலியா, கனடா, பிறிட்டன், நியூஸிலாந்து ஆகிய நாடுகள் ஒலிம்பிக் குதிரைப் பந்தயங்களில் கலந்து கொள்கின்றன.

### பாரம் தூக்குபவருக்கு உதவி

ஆபிரிக்காவின் மிகச் சிறிய நாடான சுவாஸிலாந்திலிருந்து போல் ஹொவ்மன் என்ற பாரந் தூக்கும் வீரர் ஒருவர் ஒலிம்பிக்கில் கலந்து கொள்கிருர்.

சர்வதேச பாரந்தூக்கும் சம்மேளனத்துக்கு சந்தாப் பணம் கட்டுபவர்களாலேயே ஒலிம்பிக்கிலும் இப் போட்டியில் பங்கு கொள்ள முடியும் ஆனுல் இந்த சுவாஸிலாந்து வீரருக்கு இவ்விபரம் தெரியாது. அவர் முன்பு இச்சம்மேளனத்துடன் தொடர்பு வைக்கவில்லை இதனுல் இவர் போட்டியிடும் சந்தர்ப்பத்தை இழக்கும் நிலைக்குள்ளானுர். அவரிடம் இச்சம்மேளனத்துக்கு செலுத்தக்கூடியளவு பணமும் இருக்கவில்லை.

இத்தகவல் ஒருவாறு பத்திரிகைகளில் வெளிவந்தது. இதனையடுத்து பல அமெரிக்கர்கள் இவருக்கு உதவ முன்வந்தனர். இவருக்கு வேண்டிய 300 டாலர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாரந்தூக்கும் போட்டியின்போது அணியும் ஆடை, காலணி என்பவற்றையும் சில அமெரிக்கர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

தற்போது இவ்வீரர் தமது 75 கிலோ கிராம் போட்டிகளில் பங்கெடுக்கும் வாய்ப்பை இவ்உதவிகள் மூலம் பெற்றுள்ளார். (கி)

### பதக்கப் பட்டியல்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 34 | 21 | 4 |
| சீனு | 10 | 3 | 5 |
| ருமேனியா | 8 | 7 | 3 |
| இத்தாலி | 5 | 1 | 2 |
| மே. ஜேர்மனி | 4 | 6 | 7 |
| கனடா | 4 | 5 | 1 |
| ஜப்பான் | 3 | 0 | 5 |
| ஆஸ்திரேலியா | 1 | 4 | 5 |
| பிரிட்டன் | 1 | 2 | 6 |
| பிரான்ஸ் | 1 | 2 | 3 |
| நெதர்லாந்து | 1 | 1 | 3 |
| பின்லாந்து | 1 | 0 | 2 |
| தென் கொரியா | 1 | 0 | 1 |
| பெல்ஜியம் | 1 | 0 | 1 |
| நியூஸிலாந்து | 1 | 0 | 0 |
| சுவீடன் | 0 | 5 | 3 |
| சுவிற்சலாந்து | 0 | 1 | 2 |
| மெக்ஸிக்கோ | 0 | 1 | 1 |
| பிரேஸில் | 0 | 1 | 0 |
| கொலம்பியா | 0 | 1 | 0 |
| பேரு | 0 | 1 | 0 |
| நோர்வே | 0 | 0 | 1 |
| தாய்வான் | 0 | 0 | 1 |
| யூகோஸ்லாவியா | 0 | 0 | 1 |

செய்திகள் ★

### மணிவாக்கு

''தெண்ணீரடு புற்கை யாயினுந் தாள்தந்தது
உண்ணலி னூங்கினியதில்''

—திருக்குறள்

# நமதுநோக்கு

## திருமணவியாபாரம்

மனை மாட்சி யென்ற சிறந்த பண்பில் அமைக்கப்பெற்றதே தமிழ் மக்களின் சமுக வாழ்வு.

இல்லறம் பூரண அழகு பெறவேண்டுமாயின்குடும்ப வாழ்க்கை மாண்புடையதாகவேண்டும்.

இதனுல்தான் திருமணம் ஒவ்வொரு ஆண், பெண்ணின் வாழ்வில் மிகமுக்கிய நிகழ்ச்சியெனக் கொள்ளப்படுகிறது.

இன்று இங்கு வாழும் தமிழ் மக்களின் பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டிய யாழ்ப்பாணத்தில் திருமணம் ஒரு வியாபாரமாக மாறிவருவதை திரு. நா. மாணிக்க இடைக்காடர் தமக்குரித்தான கணிதத் தெளிவுடனும், சாந்தமான நடையிலும் எங்கள் நேற்றைய வாரமலரில் விவரித்திருக்கின்ருர்.

திருமணம் இன்று யாழ்ப்பாண வியாபார முயற்சிகளில் மிகப்பெரிதாகக் காணப்படுகிறது. இந்த உண்மையே அவர் எழுதிய கட்டுரையில் காணமுடிகிறது; அது முற்றிலும் சரி என்று நாம் சொல்வது மிகைபோல் தோன்றும். அப்படியல்ல: சீதன விடயம் தலையெடுக்காத திருமணத்தை நாம் குறிப்பிடவில்லை. அது இன்று புறநடை.

எங்கள் சமுகத்தை இன்று பீடித்திருக்கும் பெரும் நோய் சீதனம். ஒருமகனைப் படிப்பித்து நல்ல உத்தியோகத்தில் அமர்த்திவிட்டால் அவன் விலை மதிக்க முடியாத விற்பனைப் பொருள்; இவ்வாறு எண்ணுபவரும் எண்ணவைப்பவரும் பொருள் படைத்த பெண்ணின் தந்தை. ''என்னவிதத்திலும், என்ன விலையிலும் ஒரு டாக்டர், எஞ்சினியர், கணக்கறிஞர் போன்ற பெரும் புள்ளியை வாங்கி விடுகிறேன்'' என்ற மனப்போக்கில்லாதவர் எத்தனை பேர்?

கடந்த 15 ஆண்டுகளில் நடைபெறும் சமுதாய மாற்றங்களை நன்கு ஆராய்ந்து அவற்றின் கருத்துக்களை விளங்க முடியுமானுல் எம்மை எதிர்நோக்கும் பேரழிவை ஒருவாறு தடுக்க முடியும்.

''அழக்கொண்ட எல்லாம் அழப்போம்'' என்பது வெறும் பழமொழியா? வந்த வெள்ளம் நின்ற வெள்ளத்தையுங் கொண்டு போவதை நாம் நேரில் காணவில்லையா?

## நாகரிக நெருக்கடி

குண்டர்களால் நலிவுற்று வந்தஉலகம்இன்றுகுண்டுகளால் நலிவுறுகின்றது. குண்டர்கள் ஒதுங்கி விட்டனர் என்று சொல்வதற்கில்லை. பலர் கைவிட்ட மாட்டுவண்டி, எரிபொருள் தட்டுப்பாட்டால் மீண்டும் வீதிகளில் நடமாடவில்லையா?

குண்டுகள் தாமாக வெடிப்பதும், வீசப்படுவதும், இன்றைய போர் முறையாக வந்து விட்டது.

சென்றவாரம் யாழ்ப்பாணம், ஸ்டான்லி வீதி மக்கள் வங்கி குண்டு வீச்சால் பாதிக்கப்பட்டது. வடமராட்சியில் பொலிகண்டிக் கடலில் கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். அண்மையில்கொழும்பு ஒபெராய் ஹோட்டலில் குண்டு வெடித்து சேதம் ஏற்படுத்தியது. இவை இன்றைய இலங்கைச் சம்பவங்கள்.

மிகப் பாரதூரமான குண்டுவெடிப்பு சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமானநிலையத்தில் நடைபெற்றிருக்கிறது; பாரதூரமென்று கூறும்போது அதன் ஆக்கிரமிப்பையும் விளைவையும் குறிப்பிடுகின்ருேம், இறந்தோர் தொகை அதிகம்; யார் யாரென்று அடையாளம் காணமுடியாத நிலை. இலங்கையரும் இறந்திருக்கின்றனரென்ற அச்சம்.

பயணியென்று சொல்லப்படுபவரின் பெட்டிகளில் இருந்து குண்டுவெடித்த மர்மம்; குண்டுகள் அதி சக்திவாய்ந்த நவீனரகமானவை என்பதால் வெளிநாட்டுச் சக்திகள் சம்பந்தம் என்ற சந்தேகம் -இவற்றை விசாரித்து உண்மையை வெளிப்படுத்தும் நம்பிக்கை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு உண்டென்று சொல்லப்படுகிறது.

இலங்கை ஜனதிபதி ஜெயவர்த்தனவின் மாளிகைக்கு முன்னுல் கடந்த வருட ஆடியில் சுவாலித்த நெருப்பைக்கண்டு அவர் சொன்னது, ''நாகரிக நெருக்கடியின் அறிகுறி இது''. இதனைப் பத்திரிகைகள் விதந்து வெளியிட்டன.

மெத்தச்சரியான குறிப்பு இது. ஆனுல் இன்று வரைக்கும் இதன் வியாக்கியானம் முடிந்தபாடில்லை. இதனை விளங்கி நெருக்கடியைத் தீர்க்க எத்தனம் எடுத்த எவரும் வெற்றி காணவில்லை.

ஜப்பானில் அணுகுண்டு வீசப்பட்டதும் இரண்டாவது உலகயுத்தம் முற்ருக முடிந்தது. இன்று நாற்பது வருடங்களின்பின் ஜப்பான் அழிந்துவிட்டதா? வெற்றி பெற்றவர்கள் சிறந்து விட்டனரா?

குண்டுக்கப்பால், குண்டுக்கடிப்படையான விடயம் அதில் தொடர்பான நாடுகளில் இன்னும் தீர்க்கப் படவில்லை. கொந்தளிப்பு அதிகரித்துக் கொண்டே போகிறது.

நாகரிகம் நகரத்துடன், நகரவாழ்வுடன் தொடர்புடையது. மிகச் சிக்கலானது. நெருக்கடி தீர்வது சுலபமல்ல.

## இடம்பெயர்ந்த ஆசிரியர் விவகாரம்:

# விசாரணைக்குழுவில் இருவர் நியமிக்கப்படவில்லை

## இ. த. ஆ. சங்க செயலாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் விவகாரத்தினை விசாரித்து இடமாற்றம் வழங்குவதற்கென நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழுவிற்கு மேலும் இருவர் நியமிக்கப்பட்டதாக வெளிவந்த செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு த. மகாசிவம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோப்பாய்க் கிளையின் ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது-:

'' 3ம் தவணைப்' பாடசாலைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் பாதிக்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் இடமாற்றம்கிடைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் 1984 ஜனவரி மாதத்தில் நடைபெற்றிருக்க வேண்டிய வருடாந்த இடமாற்றமும் 3ந்தவணை ஆரம்பமாவதற்குமுன்னர் நடைபெறவுள்ளது.

''இவ்வாண்டு நடைபெறவிருக்கும் ஆசிரியர் நியமனங்களில் ஐம்பதுவீதம் தமிழாசிரியர் நியமனங்களாக வழங்கப்படவுள்ளது இந்நியமனங்கள் நியாயமாகவும், நீதியாகவும் எவ்வித ஊழலுமற்ற முறையில் துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ருர்.

## திருப்பலிப்பூசை

(கரவெட்டி)

நேற்று முன்தினம் குருப்பட்டம் பெற்ற வண பிதா ஏ, சகாயதாசன் தமது பிறப்பிடமான பண்டத்தரிப்பு புனித பற்றிமாதா ஆலயத்தில் இன்று தமது முதல்திருப்பலியை நிறைவேற்றுவார். அதன் பின்னர் பங்குத்தந்தை வண. பிதா சீ ஜெயக்குமார் தலைமையில் அப்பகுதி மக்களால் வரவேற்பு உபசாரம் அளிக்கப்படும்.

## இன்று அவசியம்வேண்டுவது ஆன்மீக ஒருமைப்பாடு

ஆத்மீக சிந்தனைகள்தான் அறிவினைத் துலங்கச்செய்யும். அப்படியான சிந்தனைகளுக்கு வித்திட்டு, வளர்த்து நிலைகொள்ளச் செய்யும் வாய்ப்பு மதப்பெரியார்களுக்கு உண்டு.

தோன்றிய காலத்திலும், அவை உருவாக்கப்பட்ட சூழ்நிலைகளாலும், அனுஷ்டான முறைகளாலும் மதங்களிடையே வேறுபாடுகள் இருக்கலாம். ஆனுலும் அவற்றின் குறிக்கோள்கள் ஒன்றே.

இந்தச் சின்னஞ்சிறு நாட்டிலே உலகளாவிய நான்கு பெரிய மதங்கள் நிலைகொண்டுள்ளன. அன்பு, கருணை, சமத்துவ நோக்கு, தியாகம் ஆகிய இலட்சியங்களையே இம் மதங்கள் சிறப்பாகக் கொண்டுள்ளன. இந்த இலட்சியங்கள் இன்றுவரை கைகூடிப் பயன் தந்தனவா என்பது தான் சந்தேகம்.

ஆன்மீக உணர்வோடு கூடிய அறிவுத் தெளிவு எம்மிடையே ஏற்பட்டிருந்தால் இயற்கை வளமிக்க இந்தநாடு பூலோக சொர்க்கமாக மாறியிருக்கும். இல்லையென்ற தவிப்பு இல்லாமற் போயிருக்கும். சிந்தனைத் தெளிவுடைய மக்கள் வாழும் நாட்டிலேதான் ஜனநாயகம் வெற்றியைக் காணமுடியும்.

இந்த நாட்டு ஜனநாயகத்தில் பேராசைகளும், சுயநலச் சிந்தனைகளும் இடம் பிடித்து விட்டன. இவற்ருல் போட்டி பொருமையும், துவேஷ உணர்வும் நிறைவு கண்டுள்ளன. நாட்டின் இணையற்ற செல்வங்களான இளைய தலைமுறையினரிடையே தம் எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கையும், விரக்தியும் இடம்பெற்றுள்ளன. இவ்விதமாகஅல்லலுக்கு ஆளாகி வரும் இளையதலைமுறையினரின் விலைமதிக்க முடியாத திறமைகளும் ஆற்றல்களும் அவமாகப் போகின்றன. இவ்வழிவுகளை மீளப் பெறல் கடனமாகும். சமாதான உணர்வும் சமத்துவ நெறியும் வளர்க்கப்பட்டால் இந்தப் பேரழிவுகளை இனி மேலாவது தடுத்து நிறுத்தலாம் இந்த உண்மையைப் பொது மக்களுக்குப் போதிப்பவர்கள் யாவர்?

அண்மையிலே இந்த, நாட்டின் மதப் பெரியார்கள் சிலர் கூடி இன்றைய சூழ்நிலையில் நாட்டுக்கு ஏற்படவுள்ள ஆபத்தை உணர்ந்து அமைதிப் பணிபுரிய ஆரம்பித்திருக்கிருர்கள். இவர்கள் பணிக்கு உறுதுணையாக எஞ்சியுள்ள மதப் பெரியார்களும், பத்திரிகையாளர்களும், கல்வி நிறுவனங்களும் மற்றும் சகல துறையினரும் ஒத்துழைப்புக் கிடைத்தால் மிகக் குறுகிய காலத்தில் இந்தப்பொன் நாடு பல துறைகளிலும் சிறந்தோங்கும் என்பதில் ஐயமில்லை. இது பற்றி இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் சிந்திப்போமாக.

அ.நமசிவாயம்
யாழ்ப்பாணம்.

### மக்கள் கருத்து

### இன்று நல்லைக்கந்தன் 5-ம் திருவிழா

# முருகனைத் தொழுவேன்



முருகனை யேதொழு வேன் — வாழ்
முழுவது மேபணி வேன்
உருகி யுருகிநிற் பேன் — என்னை
உவந்து வந்து ஏற் பான்.

மருகனை யேதொழு வேன் — அவன்
மருங்கினி லேயிருப் பேன்
கருதும் பொருள்தரு வான் — என்ளை
கலங்க வேவிட மாட் டான்

குமரனை யேதொழு வேன் — உள்ளக்
கோவிலி லேவைப் பேன்
அமரர்க்கு வாழ்வளித் து — அன்பால்
ஆட் கொண் ட தேவ னன்ருே?

கந்தனை யேதொழு வேன் — அவன்
காலடி யிற்கிடப் பேன்
பந்தத்தி னையறுப் பான் — பெரும்
பக்தியி னைசுரப் பான்.

வேலனை யேதொழு வேன் — கை
வேலினை யேசுமப் பேன்
காலனை யேவிரட்டி — என்னைக்
காக்குங் கடவு ளவனே.

ஆறுமுக னல்ல வா — இங்கே
அனைத்திற்குங் காவலப் பா
ஏறுமயி லேறி யே — ஆடும்
ஈசன் அவன்அல்ல வா

அழகனென் பாரவ னை — அவன்
அப்ப னென் பார்சிவ னை
பழகுவ தற்கினி யன் — இந்தப்
பார்வணங் கும்புனி தன்.

— மணிமன்றன்

# திருமலை செய்திகள்

## சிங்களக் கைதிகள் அநுராதபுரம் மாற்றம்

திருகோணமலை விளக்கமறியலில் காவலில்வைக்கப்பட்டிருந்த சிங்களக்கைதிகள் அனைவரும் பாதுகாப்புக்காரணங்களுக்காக அநுராதபுரம் விளக்கமறியற் கூடத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை விளக்கமறியற்கூடத்தில் தற்சமயம் தமிழ் கைதிகள் மட்டுமே உள்ளனர்.

இந்த இடமாற்றம் காரணமாக 1983 ஜூன் வன்செயலின்போது இடம்பெற்ற கொலைச்சம்பவங்கள் தொடர்பானவொகலைவழக்கு விசாரணைகள் பின்போடப்பட்டுள்ளன.

அநுராதபுர விளக்கமறியற்கூடத்தில் வைக்கப்பட்டுள்ள இச் சிங்களக்கைதிகள் வழக்கு விசாரணைகளுக்குக் கொண்டு வரப்படாததே இதற்குக்காரணமாகும்.

சிறைச்சாலை ஆணையாளரின் உத்தரவுக்கிணங்கவே இந்த இடமாற்றம் நடைபெற்றுள்ளது.

ஆணையாளரின்உத்தரவு மீண்டும் கிடைத்தபின்னர்தான் அநுராதபுரத்தில் இருந்து இக் கைதிகள் நீதிமன்றவிசாரணைகளுக்காக திருகோணமலைக்கு கொண்டுவரப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டது.

## கரும்புச் செய்கைபற்றி பிரசாரம்

''நெற்செய்கையில் பார்க்க கரும்புச் செய்கையில் கூடுதலாகலாபம் கிடைக்கும்.

''செலவுகள் எல்லாம் போக ஒரு ஏக்கர் கரும்புச் செய்கையில் 20,000 ரூபா நிகரலாபமாகக்கிடைக்கும்.

''நெற்செய்கைக்குத் தேவையான நீரிலும்பார்க்க மிகக்குறைவான நீரே கரும்பு பயிரிடத் தேவைப்படும்''

மேற்கூறப்பட்ட அம்சங்களை வலியுறுத்தி கரும்புச் செய்கைபற்றி திருமலைமாவட்ட விவசாயிகள் மத்தியில் பிரசாரத்தை மேற்கொள்வது என்று திருமலைமாவட்ட விவசாய இணைப்புக்கமிட்டி தீர்மானித்தது.

## நெற்செய்கை நஷ்டஈடு அதிகரிப்பு

பயிர் காப்புறுதித் திட்டத்தின் கீழ் நெற்செய்கைக்கு நஷ்டஈடு வழங்கும் தொகை ஏக்கருக்கு 2,200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது முன்னர் ஏக்கருக்கு 1,200 ரூபாவாக இருந்தது.

நஷ்டஈட்டுத் தொகை அதிகரிக்கப்பட்டதுடன் வழங்கப்படும் நஷ்டஈடு மொத்தமாக ஒரே தடவையில் வழங்கப்படவிருக்கின்றது.

## கிராம சேவை அலுவலர் கைது!

சாரதி லைசென்ஸ் வழங்குவது சம்பந்தமான மோசடிச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கிராம சேவை அலுவலர் ஒருவரை திருமலை விஷேட புலனாய்வுப் பொலிசார் கைது செய்து திருமலை நீதி மன்றத்தில் ஆஜர் செய்தனர்.

## விதைவெங்காயக் களஞ்சியம்

மாதகல் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் விதை வெங்காயக் களஞ்சியம் போன்று ஒரு களஞ்சியத்தை திருமலை மாவட்டத்திலும் அமைக்க விவசாயத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நிலாவெளிக் கிராமத்தில் இவ்விதை வெங்காயக் களஞ்சியம், நிலாவெளிக் கூட்டுறவுச் சங்கத்தினுல் அமைக்கப்படவுள்ளது.

## வானொலியில் இன்று

(யாழ்ப்பாணம்)

மாவைக் கந்தன் தேர் தீர்த்தோற்சவம் தொகுப்புரை இன்று காலை 7-35முதல் 8-05 மணிவரை இலங்கை வானொலியில் இடம் பெறும்.

## வழிபாடு

[சுழிபுரம்]

அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் இம் மாதம் பதினொராம் திகதி காலை ஆச்சிரம வாழ்க்கை வழிபாடு நடை பெறவுள்ளது

இதற்கான ஏற்பாடுகளை ஆச்சிரம நிர்வாகிகள் செய்துள்ளனர்.

# "ஒவ்வொரு பகுதியும் முன்னேற முன்னேற்றச் சபைகள் அமைக்கப்படவேண்டும்"

(யாழ்ப் ாணம்)

''இன்று நாம் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இத்தகைய நெருக்கடியில் இப்படியான சபைகள் உருவாக்கப்பட்டு, அந்தந்தப் பகுதியை முன்னேற்றமடையச் செய்வது மிக,மிக அவசியமானதொரு காரியமாகும். ஒரு கால கட்டத்தில் எமது பகுதி ஐக்கியமின்மையால் எம் மக்களின் வளர்ச்சி மிகவும் பொலிவிழந்ததாகக் காணப்பட்டது. ஆனுல் இன்று சகலரும் ஐக்கியப்பட்டு இப்படியானதொரு சபையை அமைப்பது மிகவும் வரவேற்கத்தக்கது'' இவ்வாறு எஸ். கதிரமலை யாழ். கஸ்தூரியார்வீதி கொலைவலக்கிய ஆரோக்கிய மாதா ஐக்கிய முன்னேற்றச் சபைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசும் பொழுது கூறினுர்.

அவர் மேலும் கூறும்பொழுது இம்மாதாகோவில் எமது மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமான கொடையாகும் என்றுர்.

சபையின் புதுவருட உத்தியோகஸ்தர்கள் வருமாறு: போஷகர்: பங்குத்தந்தை வணக்கத்துக்குரிய ஆர். எம். இம்மனுவல், தலைவர்: திரு தி. அமிர்தநாதன், உபதலைவர்: திரு. எஸ்.கதிரமலை, செயலாளர்: திரு. சி. இராசதுரை, உபசெயலாளர்: திரு. சி. தேவபாலன், தனுதிகாரி: திரு இ விக்ரர் ஜெயரத்தினம்.

5 பெண்களும் 5 ஆண்களுமாகப் பத்துப் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## நாளைய செய்தி இன்று

★ பாராளுமன்றம் நாளை பிற்பகல் மூன்று மணிக்கு கூடுகிறது.

★ நோபல் பரிசு பெற்ற பாரத தேசியக் கவி ரவீந்திரநாத்தாகூரின் மறைவு தினம் நாளையாகும்.

## பயிற்சி வகுப்பு

[பச்சிலைப்பள்ளி]

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு 'செட் அப்' கரப்பந்தாட்ட பயிற்சி வகுப்புக்கள் தேசியஇளைஞர் சேவை மன்றத்தினுல் மூன்று நாட்கள் நடத்தப்படவுள்ளன இதற்கான ஏற்பாடுகளை தேசியஇளைஞர் சேவை அதிகாரி செல்வி வல்லிபுரம் விமலேஸ்வரி மேற்கொண்டு வருகிறுர்,

# ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட 80 குடும்பங்கள் இயக்கச்சியில் குடியமர்த்தப்படும்

[அரியாலை]

1983-ம் ஆண்டில் நடைபெற்ற ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்டநிலையில் வடபகுதியிலுள் அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் 80 குடும்பங்களைக் குடியேற்ற யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ. ஸ்தாபனம் சர்வதேச வை. எம். சீ. ஏ. ஸ்தாபனங்களின் மூலம் பெற்ற நிதியைக் கொண்டு இயக்கச்சியில் 40 ஏக்கர காணியை வாங்கியுள்ளது.

ஒரு குடும்பத்துக்கு ½ ஏக்கர் காணி வழங்கப்படுமென்றும், இவர்களுக்கெனத் தனித்தனியாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுமென்றும், இவர்களின் பிள்ளைகள் கற்பதற்குப் பாடசாலையொன்றும், சனசமூக நிலையமொன்றும் இக்காணியில் நிறுவப்படவிருக்கின்றன.

இந்த வீடுகளில் குடியேற்றப்படுவோர் கூட்டாகவும், தனித்தனியாகவும் கோழி வளர்க்கவும், சிறுகைத்தொழில்களை மேற்கொள்ளவும் நிதியுதவிகள் வழங்கப்படவிருக்கிறது.

இவ்வீடுகள் அமைப்பது சம்பந்தமான வரைபடங்கள் தற்பொழுது பரிசீலனை செய்யப்பட்டுவருவதாகவும், கூடிய விரைவில் வீடுகள் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக இதன் பொறுப்பாளர்களில் ஒருவரான திரு. எம். சி. பிரான்சிஸ் தெரிவித்தார்.

# எலும்புத்துண்டுகள்பற்றிய சட்டவைத்திய அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க எரிந்த கட்டட இடிபாடுகளுக்குள் கண்டெடுத்த எலும்புத் துண்டுகள் மனித எலும்புகளா? இல்லையா? என்பது பற்றிய சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை இன்று 6-ம் திகதி சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். நீதவான் திரு எஸ் நாகராசா, இந்த எலும்புகளை பரிசோதனை செய்து மனித எலும்புகளா என்பது பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டவைத்திய அதிகாரியை பணித்திருந்தார்.

இவ்விவகாரம் தொடர்பான வழக்கு இம்மாதம் 6-ம் திகதி யாழ். நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. அன்று சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

யாழ் சிறு குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் கே.முத்துத்தம்பி இதுபற்றி விசாரணையை மேற்கொண்டு சில சாட்சியங்களைப் பதிவுசெய்து வருகின்றுர். இம்மாதம் 6ம் தேதி சாட்சிகளை அவர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்வார் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

ஏப்ரல் மாதம் 9ம் தேதி யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கம் தீக்கிரையான பின்னர், இரு ஊழியர்கள் காணுமல் போனுர்கள். இதுவரை அவர்கள் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (க)

# இப்படியும்மோசடி?

[யாழ்ப்பாணம்]

பிரான்ஸ் தேசத்திலிருந்து ஒருவர், தமது தந்தையாரிடம் கொடுக்குமாறு அனுப்பி வைத்த 10 ஆயிரம் பிராங் பணத்தை மோசடி செய்த ஒருவர் பொலிசாரிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைச் சேர்ந்த எஸ். காந்தரூபன்[28 வயது] என்பவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவராவார்.

சுமார் 3 மாதங்களுக்கு முன்னர் பிரான்ஸ் நாட்டிலிருக்கும் இரத்தினம் மகேசன் இலங்கை நாணயப்படி சுமார் 28 ஆயிரம் ரூபா பெறுமதியான 10 ஆயிரம் பிராங்கைத் தமது தந்தையாரிடம் கொடுக்கும்படி மேற்படி சந்தேகநபரிடம் அனுப்பிவைத்தாராம்.

பணம் அனுப்பி வைத்தது சம்பந்தமான கடிதம் ஒன்றையும் தமது தந்தையாருக்கும் கடந்தமாதம்1ம்திகதி அனுப்பி வைத்தாராம்.

கடிதம் கிடைத்ததும் இரத்தினம் என்பவர் சந்தேக நபரிடம் கேட்டபோது, பணம் அனுப்பிவைக்கவில்லை என்று தெரிவிக்கவே, யாழ். பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அவர் புகார் செய்தார்.

இதுசம்பந்தமாக விசாரணை மேற்கொண்ட யாழ்.மாவட்ட விசேஷ குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் சார்ஜன்ட் ஜி. மாசிலாமணியும், கான்ஸ்டபிள் எஸ். தனபாலசிங்கமும் சிவிலுடையிற் சென்று சந்தேக நபரைக் கைதுசெய்தனர்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் சந்தேகநபர் ஆஜர் செய்யப்பட்டபோது, 10 ஆயிரம் ரூபா உறுதிப்பிணையில் செல்லும்படியும், இம்மாதம் 28-ம் திகதி ஆஜராகும்படியும் நீதவான் உத்தரவிட்டார்.

(மா)


முடிவு திகதி 15–8–84

இரசிகமணி கனக செந்திநாதன்

நினைவுக் குறுநாவல் போட்டி

★ 1-ம் பரிசு ரூபா 500-00

★ 2-ம் பரிசு ரூபா 300-00

★ அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் நினைவாக யாழ். இலக்கிய வட்டமும் 'ஈழநாடு'ம் இணைந்து நடத்தும் இக் குறுநாவல் போட்டியில் எழுத்தாளர்கள் எவரும் கலந்து கொள்ளலாம்.

★ ஆக்கங்கள் தமது சொந்தப் படைப்புக்கள் என உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

★ தாளின் ஒருபக்கத்தில் மட்டும் (புல்ஸ்காப்) 30 முதல் 80 பக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

★ உறையின் இடது மேல் மூலையில் 'இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி' எனக் குறிப்பிடவும்.

எழுத்தாளர்கள் தங்கள் குறுநாவலை 15-8-84 திகதிவரை அனுப்பலாம்.

★ அனுப்பவேண்டிய முகவரி :

இரசிகமணி குறுநாவல் போட்டி

ஈழநாடு வாரமலர்,

த. பெ. எண் : 49,

யாழ்ப்பாணம்.



எண்ணற்ற ரசிகர்களை தன்னகத்தே வைத்திருக்கும்

"வீடியோ பிரசாத்"தின்

கடந்த வார வெளியீடுகள்

★ நெஞ்சத்தை அள்ளித்தா (மோகன்)

★ ஏழாவது இரவில் (கமல்)

எமது இவ்வார மாபெரும் வெளியீடு

பாரதிராஜாவின் கைவண்ணத்தில்

★ A. V. M.இன் "புதுமைப் பெண்"

இன்றே நீங்களும் ஓர் அங்கத்தவராகி புதுப்புது வண்ணப் படங்களைப் பார்த்து மகிழுங்கள்.

"வீடியோ பிரசாத்"

(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)

49, முனீஸ்வரன் ரோட்,

யாழ்ப்பாணம்.

# "கிராம அபிவிருத்திச் சங்கங்களில் இவர்கள் எந்தப்பதவியும் வகிக்கமுடியாது"

[சித்தன்கேணி]

''விசேடசேவை அலுவலர்கள், கிராமசேவை அலுவலர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களில் எந்த ஒரு பதவியையும் வகிக்கமுடியாது'' என்று சுற்று நிருபம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க செயலக தலைமை உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரட்ணம் இதுதொடர்பாக சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பிவைத்துள்ளார்.

இச் சுற்றுநிருபத்தில் கிராம அபிவிருத்திச்சங்கங்களை இவ் உத்தியோகத்தர்களே சிபார்சு செய்ய இருப்பதனால் எந்த ஒரு பதவியையுமோ அல்லது செயற்குழு உறுப்பினராகவோ இருக்க முடியாது எனக்குறிப் பிடப்பட்டுள்ளது.

## ரூபவாஹினி

மாலை

5-30 நாட்டுவளம்
5-35 'வூடி வூட் பெக்கர்'
6-00 விளையாட்டுப் பயிற்சி (சிங்களம்)
6-20 இயற்கையும் விஞ்ஞானமும் சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-35 'ஊரும் உலகும்' (தமிழ்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 'கலையரங்கம்
7-45 வனவாழ்க்கை
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
8-55 'வெஸ்மினிஸ்டர்' (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-5ɹ ஆழ்கடல் ஆராய்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 ஆழ்கடல் ஆராய்ச்சி தொடர்ச்சி)
10-45 நிகழ்ச்சிகள் முடிவு

# வவனியாவில் சுடப்பட்டவர் அடையாளம் காணப்பட்டார்

(வவனியா)

கடந்த மாதம் 28 ம் திகதி இரவு மன்னார்- வவனியா வீதி பட்டாணிச்சி புளியங்குளம் என்ற இடத்தில் மின்கம்பத்தில் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கி சூட்டுக்காயத்துடன் இறந்து கிடந்த இளைஞர் வவனியா குருக்கள் ஊரைச் சேர்ந்த கதிர்காமு குணசேகரம் [24 வயது] என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வளர்ப்புத் தாயான வள்ளிப்பிள்ளை இறந்தவர் தனது சகோதரியின் மகன்என அடையாளம் காட்டியுள்ளார்.

வவனியா பதில் நீதிபதி ஆர் வி. வில்வராஜா மரண விசாரணையினை நடத்தி கொலை என தீர்ப்பளித்துள்ளார்.

விசாரணையின் போது இறந்தவரின் வளர்ப்புத்தாய் வள்ளிப்பிள்ளை, சம்பவம் நடந்த இடத்துக்கு அருகாமையிலிருந்த குடியிருப்பாளர் காதர் முகைதீன் பொலிஸ் உத்தியோகத்தர் எல். டபிள்யூ, ரணவீர ஆகியோரும் சாட்சியமளித்துள்ளனர்.

பிரேதபரிசோதனையினை வவனியா மாவட்ட பதில் வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சிறீஸ்இராஜேஸ்வரன் மேற்கொண்டிருந்தார்.

சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பதில் நீதிபதி உத்தரவு இட்டுள்ளார்.

# இடமாற்றம் ரத்து

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட காரியாலய ஆளணி உதவியாளராக விருந்து உதவி முகாமையாராகப் பதவி உயர்த்தப் பட்ட திரு.க.சின்னராசாவின் திடீர் இடமாற்றம் ரத்து செய்யப் பட்டுள்து.

# இன்றைய பலன்

மாதம்-ஆடி
திகதி-22(06-08-1984)
வாரம்-திங்கள்
திதி-தசமி-முன்இரவு 9-02 வரை
நக்ஷத்திரம்-அனுஷம் பிற்பகல் 2-30 வரை

மேடம்:- ஒலிபரப்பும் வாழ்க்கை உறவினர்கள் மத்தியில் ஒற்றுமை மலரும் எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கலாம் பொன்னுனதினம்.

இடபம்:- எள்ளிச்சிரித்தவர்கள் இன்று அள்ளி அணைப்பதற்கு முன்வருவார்கள் செய்தொழிலால் சிறப்புண்டு தெய்வத்தின் துணையுண்டு.

மிதுனம்:- ஊதியம் வளரும் உற்சாகம் பெருகும் உறவினர் வாழ்த்தும் இதயத்தில் இனிமை சேர்க்கும் புதினமொன்று செவிகளில் வந்து மோதும்.

கடகம்:- வேதனையின் ரேகைகள் படரும் சகோதர வழியில் உடல்நலம் பாதிக்கப்படலாம் பிணிக்கு இடங்கொடாது சுகாதாரமாக இருக்கவும்.

சிங்கம்:- பிடிவாதபோக்கு உங்கள் முன்னேற்றத்தை தடுக்கும் இரக்க சிந்தையுடன் இறைநம்பிக்கையும்வேண்டும்

கன்னி:- நலன் தரும் நிகழ்ச்சிகள் நடைபெறும் குடும்பத்தில் மிக்க மகிழ்ச்சியிண்டு நேர்மை வழி நிற்பீர்கள் பெரியோர்களின் ஆதரவும் கிடைக்கும்.

துலாம்:- எதிர்பாராத பணமுடை ஏற்படும் கடன் தொல்லைகளால் கஷ்டப்படுவீர்கள் தொழில்துறையில் தொல்லைகள் தோன்றி மறையும்.

விருச்சிகம்:- வசதிகள் பெருகும் மேலிடத்து ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் கல்வியில் முன்னேற்றம்முண்டு இனிக்கும் செய்தியும் இன்று கிடைக்கும்.

தனுசு:- போட்டாபோட்டிகளில் வெற்றியுண்டு பகைத்தவர்கள் நட்புரிமை கொண்டாடுவார்கள் நடுவழியில் நிற்பதால் நற்புகழும்கிடைக்கும்.

மகரம்;- உணர்ச்சிபோராட்டங்கள் இன்று தலைதூக்கும் எதிர்பாராத விதமாகத் தோல்வி ஏற்படலாம் எக்காரியத்தையும் இன்று ஆரம்பிக்காதிருக்கவும்.

கும்பம்:- இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும் காதல்கணைதாக்கும் கவிஞர் கௌரவிக்கப் படுவார்கள் பாலுணர்ச்சி மேலிடும்.

மீனம்:- உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும் பணவிவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம் தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

# அஞ்சலி செலுத்தி துண்டு பிரசுரங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை இயக்கத்திலிருந்து வெளியேறிய நியாய விரும்பிகள் எனத் தம்மை அறிமுகப்படுத்தியுள்ள ஒரு குழுவினர் அண்மையில் பருத்தித்துறை தம்பசிட்டியில் கொலையுண்ட பஞ்சலிங்கம் (மனோமாஸ்டர் விஜயகுமார்) மரணத்துக்கு அஞ்சலி செலுத்தித் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டுள்ளனர்.

''தமிழீழ தேசிய விடுதலைக்கும் அடக்கு ஒடுக்கு முறைகளுக்கெதிராகவும் ஆரம்பத்திலிருந்தே தன்னை அர்ப்பணித்த பஞ்சலிங்கம் (மனோமாஸ்டர் விஜயகுமார்) வெறும் அரசியல் காழ்ப்புணர்ச்சி, தனிப்பட்ட அரசியல் குரோதங்கள் காரணமாக பருத்தித்துறை தம்பசிட்டியில் மிகக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டது. ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்''என அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''மனோ மாஸ்டர் மறைவிற்கு எமது அனுதாபமும் அவரின் பணிக்கு வீரவணக்கங்களும்'' என்று தமிழீழ விடுதலை இயக்கமும் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது

# மின்னிணைப்பு வழங்குமாறு கோரிக்கை

[சித்தன்கேணி]

வதிரி பூவற்காரை விநாயகர் ஆலய வீதிக்கு மும்முனை மின்னிணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வதிரி தமிழ் மன்றமாதர் அபிவிருத்திச் சங்கம் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. சி. ஐயாத்துரைக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சங்கத்தின் கோரிக்கை மகஜரில், இவ்வீதியில் தெரு விளக்குகளும், ஐஸ்பழக் கம்பெனியும், மின் மரக்காலையும், குழாய்க் கிணறுகளும் மின்சாரத்தில் இயங்குவதனால் இரவு நேரங்களில் வீடுகளிலும், தெருக்களிலும் உள்ள மின்குமிழ்கள் குறைந்தளவு ஒளியையே கொடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உதவி அரசாங்க அதிபர் 1985ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 65 ஆயிரம் ரூபா ஒதுக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்குச் சிபார்சு செய்துள்ளார்.

# மூன்று கால் கோழிக்குஞ்சு

(சித்தன்கேணி)

சுழிபுரத்திலுள்ள வீடொன்றில் மூன்றுகால் கோழிக்குஞ்சு பொறித்துள்ளது இப்போது உயிருடன் உள்ளது.

சுழிபுரத்தைச் சேர்ந்த இ.சிறீக்காந்தன் என்பவருடைய வீட்டிலேயே இந்தக் கோழிக்குஞ்சு இருக்கிறது.


யாழ்ப்பாணத்தில் பாரிய நிறுவனமான
மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்
நிறுவனம் வழங்கும்

புதிய மகாராஜா வைப்புச்சான்றிதழ்

நீங்கள் செலுத்தும் பணத்திலும் பார்க்க
இருமடங்கு தொகை கிடைக்கிறது.

வருடாந்த மொத்த வட்டி 33 1/3 வீதம்

| நீங்கள் செலுத்தும் தொகை | மகாராஜா வைப்புச் சான்றிதழின் பெறுமதி | வட்டி வீதம் வருடாநதம் |
|---|---|---|
| ரூபா 2500 | ரூபா 5000 | 33 1/3 வீதம் |
| ரூபா 5000 | ரூபா 10000 | 33 1/3 வீதம் |
| ரூபா 25000 | ரூபா 50000 | 33 1/3 வீதம் |
| ரூபா 50000 | ரூபா 1,00,000 | 33 1/3 வீதம் |

36 மாதங்களில் நிலையான வட்டியுடன்
அதிசிறந்த முதலீடு கிடைக்கிறது.

பல்வேறு வகையான நிலையான வைப்புச்சான்றிதழ்களுக்கு
6 மாதம், 12 மாதம், 24 மாதங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

முழு விபரங்களையும் காரியாலய நேரங்களில்
விற்பனை முகாமையாளரிடம் பெறலாம்.


மகாராஜா
முதலீட்டு நிறுவனம்

122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24267

மகாராஜா கூட்டு நிறுவனங்களின் பின்பலம் கொண்ட
வரையறை செய்யப்பட்ட நிதி நிறுவனம்



வாகனச் சொந்தக்காரராக விரும்புகிறீர்களா?
பெறுமதியின் 75% கடனாகப்பெற
நாடுங்கள்...



த பினான்ஸ் கொம்பனி லிமிட்ரேட்
249, பவர் கவுஸ் ரோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7680.

## கடிகாரம் அன்பளிப்பு

[மன்னார்]

பேசாலே பொது நூல்நிலே யத்திற்கு 500 ரூபா பெறுமதி யான சுவர் கடிகாரம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள் ளது.

இச் சுவர்க் கடிகாரத்தை பேசாலே பாத்திமா கழகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது


ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-30
சிவாஜி - சரோஜாதேவி
என் தம்பி

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகிலூட்டும்மர்மச்சித்திரம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவகுமார்- ஜெய்சித்திரா
விஜயகுமார்
பொண்ணுக்கு
தங்கமனசு

வின்சர் (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30,6-30
எம். ஜி. ஆர் -சாவித்திரி
வீரப்பா - சந்திரபாபு
மகாதேவி
(புத்தம் புதிய பிரதி)

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சிவாஜி - பத்மினி
தேவிகா
சரஸ்வதிசபதம்

ராணி (யாழ் நகர்)
தினசரி 10-30, —2-30,
4-30 — 7-00
Eye For An Eye

ரீகல் (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Terrence Hill ...
Bud Spencer .. in
"WHO FINDS A FRIEND FINDS A TREASURE"
[Latest Action - Comedy]

ராஜா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30,6-00
சிவாஜி, கிரிஜா,
கண்ணும்பா நடித்த
மனோகரா
(புதிய பிரதி)
(இதுவே கடைசித் தடவையாக யாழ். நகரில் காண்பிக்கப்படுகிறது)

லிடோ யாழ். நகர்
Daily
10-30, 2-30, 4-45, 7- 15
THE BURNING
(Strictly for Adults)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ரஞ்சன்-டி.ஆர்.ராஜகுமாரி
சந்திரலேகா
[புதிய பிரதி]
அனேகரின் வேண்டு கோளுக்கிணங்க பல வருடங்களுக்குப் பின் திரையிடப்படுகிறது.


ஜூலேக்கலவர படுகொலேகள்:

# மேற்கு பெர்லினில் தமிழ் இளேஞர் அஞ்சலி

(மேற்கு பெர்லினிலிருந்து) சோம சி குலநாயகம்)

இலங்கையில் கடந்த ஆண்டு ஜூலே கலவரத்தில் உயிரிழந்த வர்களுக்கு மேற்கு பெர்லினி லுள்ள தமிழ் இளேஞர்கள் அஞ்சலி செலுத்தினர்.

நூற்றுக்கணக்கான தமிழ் இளேஞர்கள் குறுணுவால்ட் விடுதியில் கடந்த 25-ம் திகதி கூடி மூன்று நிமிட மௌனம் அனுஷ்டித்து அஞ்சலி செய் தனர்.

இந்த அஞ்சலிக் கூட்டத் திற்கு திரு. செல்வராசா தலேமைவகித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்னே தீர்வதற்கு அனேத்து உலகத் தமிழ் மக்களும் ஒன்றிணேந்து செயலாற்றவேண்டுமென்று திரு. செல்வராசா தமது தலேமையுரையில் குறிப்பிட் டார்.

திருவாளர்கள் தேவராசா, மனோகரசீலன், சிவகுமார், சிவலோகராசா, இந்திரகுமார் ஆகியோரும் உரையாற்றினுர் கள்.

## ஆத்தி மோட்டை விளேயாட்டு போட்டி

[மன்னார்]

மன்னார் ஆத்திமோட்டை பாடசாலே இல்ல விளேயாட் டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

சிகப்பு,பச்சை இல்லங்களி டையே நடைபெற்ற விளே யாட்டுப் போட்டியில் சிகப்பு இல்லம் வெற்றி பெற்றது.

இப் போட்டியில் தலேமை யுரை நிகழ்த்திய பாடசாலே அதிபர் திரு ஏ-சிவசாமி தமது உரையில் ''இவ் விளேயாட்டுப் போட்டி சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடை பெறுவதற்கு இந்த கிராமத்து மக்களே காரணம் என்ருர். ''பாடசாலேகளில் நடை பெறும் இத்தகைய விளேயாட் டுப் போட்டிகள் மாணவர் களே சமுதாயத்தில் சிறந்த விளேயாட்டு வீரர்களாக மாற் றுவதற்கு உதவும்'' என்ருர்.

வெற்றி பெற்றவர்களுக்கு பாடசாலே ஆசிரியர் எம். செல்வநாயகன் பரிசில்களே வழங்கினுர். இப்போட்டியில் பாடசாலேயின் பழைய மாண வர்களும் பங்கு பற்றினுர்கள்.

## கி.அபி.சங்கம் ஆலோசனே பெறப்படும்

[சித்தங்கேணி]

யாழ்.மாவட்டத்தில் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் இல் லாமல் இருப்பதனுல் பன் முகப்படுத்தப்பட்ட வரவுசெல வுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யும் போது கிராம அபி விருத்திச் சங்கங்களின் ஆலோ சனேகள் அந்தத்ந்தப்பிரிவு உதவி அரசாங்க அதிபரினுல் பெறப்படும். ஆதலால் கிராம அபிவிருத்திச் சங்கங்களே முன் னரிலும்பார்க்க நல்லமுறை யில் நடத்த வேண்டியது மக் களின் பொறுப்பாகும்.''

இவ்வாறு விசேடசேவை அலுவலர் திரு வி ரி கதிர்காம நாதன் கலேநகர் நேருஜிமாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் புனரமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையில் குறிப்பிட்டார்.

திருமதி பு. சிதம்பரநாதன் தலேமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கிராமசேவை அலுவலர் திரு.ஆ முருகேசு உதவிகிராம அபிவிருத்தி உத் தியோகத்தர் திரு.என். தேவ நாயகம் உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டு உரை யாற்றினுர்கள் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்:-

தலேவர்:-க.பரமேஸ்வரி, உப தலேவர்:-பு.கலேவதனு, த.லிங் கேஸ்வரி, செயலாளர்:- ஜெ. ஜெயந்தி, உபசெயலாளர்:- செ.இன்பம், பொருளாளர்:- ஐ.கமலவேணி, கணக்காய் வாளர்:- என்.கே,ரி.சிவச் செல்வி,காப்பாளர்:-து. வைத் திலிங்கம், ஆலோசகர்:- என். தேவநாயகம், இவர்களுடன் 7பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் புனித மிக் கேல் கிராம அபிவிருத்திச் சங்கப் புதிய நிர்வாகிகள் விபரம்:-

தலேவர் வ.சுவாம்பிள்ளே, செயலாளர் வை.கதிரவேலு, பொருளாளர் தே.எமிலியா னுஸ்பிள்ளே, உப தலேவர் த. பேரின்பநாயகம், தா.ஞான வெளிச்சம், உப செயலாளர் ம.பேரின்பநாதன் ஏழு நிர் வாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கத்திவெட்டுக்கு இலக்காகி மரணம்

[கிளிநொச்சி]

வயலொன்றிற்குள் மாடு செல்வதைத் தடுக்க முயன்ற வாலிபர் ஒருவர் கத்திவெட் டுக் காயங்களிற்காளாகி ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட் டார்.

ஆனேயிறவு தட்டுவங்கொட் டியைச் சேர்ந்த கந்தையா தவானந்தராசா என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக இதே இடத்தைச் சேர்ந்த கண பதிப்பிள்ளே சிவசுப்பிரமணி யம் என்பவரைக் கிளிநொச் சிப் பொலிசார் கைது செய்து விசாரணே செய்து வருகின்ற னர்.

## 'களம்' வட்ட சிறுகதைப் போட்டி முடிவுகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு 'களம், கலே இலக்கிய வட்டம் நடாத்திய சிறுகதைப்போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன. விபரம் வரு மாறு:

முதற் பரிசு ரூபா 300 முதற் பரிசுக்கு தகுந்த சிறந்த கதை கிடைக்காத காரணத்தால முதற்பரிசு வழங்கப்படவில்லே. (இது நடுவர்குழுவின் ஒருமன தான முடிவு)

இரண்டாம் பரிசு ரூபா 200 இருகதைகளுக்கு வழங்கப்படு கின்றன.

(1) வி. கே.ரவிப்பிரியாவின் 'நாம் கரைக்கின்ற உரம்' (2) தாமரைச் செல்வியின் 'முள் கிரீடங்கள்'.

மூன்ரும் பரிசு 150 இருகதை களுக்கு.

(1) சௌமினி சாம்பசிவ சர்மாவின் 'நிமிர்ந்தமலர்கள்' (2) அண்ணுதாசனின 'நிகழ்வு களின் நிர்ணயிப்புகள்'.

நான்கு ஆறுதல் பரிசுகள் ரூபா 50 வீதம் அவையாவன: கோப்பாய் எஸ். சிவத்தின் 'நியாயங்கள் சிறையிடப்படு கின்றன', எம். ஏ. நஜுமு தீனின் 'கரைக்குச் சொந்தமில் லாத அலேகள்', வி. விஷ்ணு நாதனின் 'மீறல்கள்', க. ப. லிங்கதாசனின் 'மாதா கோவில் மணியோசை'.

இச் சிறுகதைப் போட்டி திருமதி ரேஸ்பற்றிக் நினே வாக நடத்தப்பட்டது,


Building Technological Institute
கட்டிடத் தொழில்நுட்பவியல் நிறுவனம்
(கட்டிடக் கலேஞர்களாலும் பொறியியலாளர்களாலும் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்)
136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
ஆரம்பம்: 10–08–84 காலே 10–00 மணி
DIPLOMA IN DRAUGHTSMANSHIP.
(6 மாதப் பயிற்சி)
DIPLOMA IN QUANTITY SURVEYING PART II
(City Guilds London)
விரிவுரையாளர்கள்:- S. RATNESINGAM
G. RATNASINGAM.
1235

லொறி விற்பனேக்கு
நல்ல நிலேயிலுள்ளதும், உடனடி பாவனேக்கு உகந்ததுமான ஒஸ்டின் லொறி
22 சிறீ 7402 இலக்கமுடையது.
உடன் விற்பனேக்குண்டு.
காரியாலய நேரங்களில் லொறியைப் பார்வையிட்டு விலே பேசலாம்.
மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.,
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24267

K. S. B. TOURS
யாழ்ப்பாணம் — கொழும்பு
கொழும்பு — யாழ்ப்பாணம்
தினசரி பஸ் சேவைகள்
★ பண்பான உபசரிப்பு.
★ சிரமமற்ற இருக்கை வசதிகள்.
★ வெளிநாடு செல்பவர்கள் பணத்தைச் சிரமமின்றி எடுத்துச் செல்லும் வசதிகள்.
★ இரு வழிப் பயண டிக்கட் வழங்கும் வசதி.
★ சொகுசான உறங்கல் ஆசனம்.
டிக்கட் பதிவு செய்யுமிடம்:-
கே. செல்வராஜா அன் பிறதர்ஸ்,
37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
1205

45 வருடகால
நம்பிக்கைக்குரிய சேவையுடன்
26%
வட்டி வழங்கும்
இலங்கையில்
மிகப் பழமையானதும்
யாழ்ப்பாணத்தில்
தனது சொந்த நிறுவனத்தில் இருக்கும்
ஒரேயொரு நிதிஸ்தாபனம்
த பினுன்ஸ் கொம்பனி லிமிட்டட்
TFC
249, மின்சார நிலேய வீதி,
யாழ்ப்பாணம், போன்: 23680
தலேமை அலுவலகம்:
3-ம் மாடி, சிலிங்கோ ஹவுஸ், கொழும்பு - 1.
மற்றும் ஏனேய 14 கிளேகள் உண்டு.

# "பல்கலைக்கழக அனுமதிக்கு பெறவேண்டிய புள்ளிகள்

(அ.கனகசூரியர்)

எதிர் வரும் அக்டோபரில் ஆரம்பமாகும் 1984/85 கல்வி ஆண்டுக்கான பல்கலைக் கழக அனுமதி பெறுவதற்கு ஒவ்வொரு மாவட்ட அடிப்படையிலும் மாணவர்கள் க.பொ.த உயர்தர பரீட்சையில் பெற்றிருக்க வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் சம்பந்தமான விபரங்களை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு வெளியிட்டுள்ளது. இதன்படி யாழ். மாவட்டத்திலிருந்து தோற்றிய மாணவர்கள் பெற்றிருக்க வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் விபரம் வருமாறு:-

மருத்துவம்-265, பல் வைத்தியம்-258, மிருக வைத்தியம் 253, பொறியியல்(1)-263, பொறியியல்(2)-257, விவசாய விஞ்ஞானம்-242 விலங்கியல் விஞ்ஞானம்-236, முகாமைத்துவம்-247, கலை-233 வர்த்தகம்-233, சட்டம்-230' பௌதீக விஞ்ஞானம்-210.

# ஆலயம் சென்ற சமயம் வீட்டில் நகைகள் கொள்ளை

(மாவிட்டபுரம்)

வீட்டிலிருந்தவர்கள் ஆலயத்திற்குச்சென்ற சமயம் இனந் தெரியாதநபர்கள் வீட்டை உடைத்து 50,000 ரூபாபெறுமதியான நகைகளைக்கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்

வீமன்காமம் நெசவுசாலை வீதியில்உள்ள ஆறுமுகம் கனகரத்தினம் வீட்டில் இக் கொள்ளை நடந்துள்ளது.

நேற்றுமுன் தினம் இரவு 8 மணிக்கு வீட்டுக்காரர்கள் கோவிலுக்குச் சென்றுவிட்டு, நள்ளிரவு 2மணிக்கு திரும்பி வந்தபோது, 50,000 ரூபா பெறுமதியான தாலிக்கொடி, காப்பு சங்கிலிகொள்ளைபோயிருந்ததென்றும் அடுப்படியில் கறி, சோற்றுடன் இருந்த பானையையும் எடுத்துச் சென்று, வெளியில் வெறும் பானையை மட்டும்விட்டுச் சென்றுள்ளனர் என்றும் இச் சம்பவம்பற்றி கனகரத்தினம் பொலிஸில் புகார் செய்துள்ளார் (க)

## வருடாந்த பாசறை

(அரியாலை)

நல்லூர்-பரி.யாக்கோபு ஆலய வாலிபர் சங்கத்தினர் கலந்து கொள்ளும் வருடாந்த பாசறை பரந்தன் நவஜீவனத்தில் இம் மாதம் 19ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை நடை பெறவிருக்கிறது.

இந்தப் பாசறையில் கலந்துரையாடல், வேதப்பாடப் பயிற்சி, பாடல் பயிற்சி, வேத ஆராய்ச்சி என்பன நடைபெறவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண அர்ச். டீக்கன் அருட் திரு.சாம்.டி ஹோர்சிங்டன் அடிகளார் மேற்கொண்டுள்ளார்.

# திருநெல்வேலிச் 'சந்தியில் இளைஞர் சடலம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தியில் இளைஞர் ஒருவரின் சடலம் முகத்தில் காயத்துடன் மின் கம்பத்தில் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

ஏராளமான மக்கள் சென்று சடலத்தைப் பார்வையிட்டனர். இச் சடலம் இதுவரை அடையாலம்காணப்படவில்லை

சுன்னுகம் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்றுள்ளனர்.

யாழ்.பதில்நீதவான் க.கேசவன் சடலத்தைப் பார்வையிட்டு மரணவிசாரணை நடத்தினர்.

சடலத்தின் தலையில் இருதுப்பாக்கிசூட்டு காயங்கள் காணப்பட்டு மூளை சிதறிக்கிடந்தது.

20 வயது மதிக்கத்தக்க இளைஞர் சாரமும், பிறவுன் நிறச்சேட்டும் அணிந்துள்ளார். கட்டித்தொங்கவிடப்பட்டிருந்த சடலம், அறுத்து கீழே கிடந்தது பக்கத்தில் ஒரு ஒருபை காணப்பட்டது அதற்குள் 2 அரைக்கால் சட்டையும் 3 சேட்டும் இருந்தன.

மரண விசாரணையின் போது சடலம் அடையாளம் காணப்பட வில்லை.

அடையாளம் காண்பதற்காகசடலத்தை மூன்று நாட்களுக்கு யாழ்.அரசினர் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கும்படி மரணவிசாரணை அதிகாரி பணி,துள்ளார்.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். (க)

## முதலிடம் பெற்ற மாணவர்கள்

(அரியாலை)

யாழ்ப்பாண வட்டாரப் பாடசாலைகளுக் கிடையே நடைபெற பண்ணிசை, சங்கீதம், நடனம், நாடகப் போட்டிகளில் யாழ்.பாஷையூர் புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க மகா வித்தியால மாணவிகள் சிரேஷ்ட பிரிவுக்கான புதிய ஆக்க இசைப்போட்டியில்1-ம் இடத்தையும், சிரேஷ்ட பிரிவுக்கான நாடகப் போட்டியில் 1-ம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இப்போட்டிகள் யாழ்.வட்டாரக் கல்வி அதிகாரி திரு இ. சிவானந்தம் தலைமையல் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

ஒரு பாடசாலையிலிருந்து மூன்று நிகழ்ச்சிகளில் மட்டும் மாணவர் பங்கு பற்றலாம் என்ற விதிக்கமைய இவ்வித்தியாலய மாணவர்கள் போட்டியிட்ட மூன்று பிரிவுகளிலும் 1ம் இடங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## திருக்கேதீஸ்வரத்தில்

(கரவெட்டி)

வருடந்தோறும் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் கதிர்காமத் திருவிழா இம் மாதம் 9, 10, 11ம் திகதிகளில் நடைபெறும். பத்தாம் திகதி ஆலய திருப்பணிச்சபை தலைவர் மு. ஞானப்பிரகாசம் தலைமையில் பாதயாத்திரை ஒன்று மாலையில் திருக்கேதீஸ்வரத்தை வந்தடையும். அன்று அபிசேகமும், அன்னதானமும் இடம்பெறும். 11ம் திகதிகாலை பாலாவியில் சுவாமி எழுந்தருளி தீர்த்தமும் நடைபெறும்.

## திருமணத்தகராறு: இளைஞர்தற்கொலை

(கிளிநொச்சி)

காதலித்த பெண்ணை திருமணம் செய்வதற்கு பெற்றோர் தாமதம் தெரிவித்ததைத் தொடர்ந்து வாலிபர் ஒருவர் நஞ்சிடம் தஞ்சமடைந்து மரணத்தைதழுவிக் கொண்டார்.

கிளிநொச்சி கல்மடுக்குளத்தில் வசித்துவந்த மாரி. ஜெயநாதன் (18 வயது) என்பவரே மரணமானவராவார். இம் மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப்பகுதி மரணவிசாரணை அதிகாரி மு யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸ் கான்ஸ்டபிள் என். இராசசேகரம் ஆஜர் செய்தார்.

மரணமான ஜெயநாதன் பெண் ஒருவரை காதலித்து வந்தார். இவர்களது திருமணத்திற்கு பெற்றோரும், உறவினர்களும் சம்மதம்தெரிவித்திருந்தனர். ஆடிமாதத்தில் திருமணத்தைவைக்குமாறு மரணமானவர் பெற்றோரை வற்புறுத்தினர்.

ஆடிமாதத்தில் திருமணம் செய்வது கூடாதுஎனவும் ஆவணிமாதத்தில் தான் திருமணத்தை வைக்கவேண்டும் என்றும்ஒரு மாதம் தாமதிக்குமாறும் பெற்றோர் புத்திமதி கூறினர்கள். இதனுல் மரணமாணவர் கவலை அடைந்ததுடன் விரக்தியும் கொண்டிருந்தார். சம்பவதினம் ஒருவருக்கும் தெரியாது கல்மடுக்குளக் கட்டில் கிருமிநாசினியை அருந்தி மரணமானுர்.

மரணமானவரின் தமயன் மாரி. சுப்பிரமணியமும் சாட்சியமளித்ததை தொடர்ந்து தற்கொலை எனதீர்ப்பு வழங்கப்பட்டது.

## சமூகப் பணியில் ஆசிரியர் பங்கு

[ஊரெழு]

''ஆசிரியர்கள் பாடசாலையுடன் மாத்திரம் தமது நேரத்தைச் சுருக்கிக் கொள்ளும் இக் காலத்தில் ஏழாலை சைவமகாஜன வித்தியாலய ஆசிரியர் குழு மேற்கொண்ட இந்தப் பணி எனது கல்வி வட்டாரத்திலேயே முன்னேடியானதாகும். இத்தகைய முன்னுதாரண பணியினை மேற்கொள்ளுவதற்கு அசாதாரண மான துணிவும் ஆளுமையும் வலிமையுமுள்ள தலைமை வேண்டும்.''

இவ்வாறு ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய ஆசிரியர் குழு ஏற்பாடு செய்து நடத்திய ஓயவுபெற்ற அஞ்சல் நிலைய ஊழியர் திரு. க. சிவலிங்கத்தின் சேவைநலம் பாராட்டும் வைபவத்திலும், தேநீர் விருந்திலும் கலந்து கொண்டு பேசிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சயன் குறிப்பிட்டாக்.

வித்தியாலய அதிபர் திரு. வீ. த. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் திரு. தனஞ்சயன் மேலும் பேசுகையில் கூறியதாவது ''கடமையைச் சரிவரச் செய்யும் ஊழியர்கள் எவராயினும் பாராட்டுக்குரியவரே'' அந்த வகையில் கடந்த முப்பத்திரண்டு வருடங்கள் பணியாற்றி பொதுமக்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றுக்கொண்ட திரு. சிவலிங்கத்தின் சேவையைபாராட்டுவதா ஏழாலை சைவமகாஜன வித்தியாலயம் தனது தனித்துவமான பணியை இதில் நிலைநாட்டிவிட்டது என்றுர்.

வித்தியாலய அதிபர் திரு. திருநாவுக்கரசு பேசுகையில் ''நாங்கள் மாறிவரும் சூழ்நிலைகளுக்குட்பட்ட ஒரு புரட்சிகரமான காலகட்டத்தில் வாழ்கிறேம். எமது சிந்தனைகளிலும் செயல்களிலும் நவீன மாற்றங்கள் இன்றியமையாதவை என்றுர்-''

திரு நா. செல்வரத்தினம், திருமதி இராசபூபதி திருநாவுக்கரசு, திரு. சு. குமாரசாமி ஆகியோரும் உரையாற்றினுர்கள்.

# சென்னை விமானநிலைய குண்டுவெடிப்பு தமிழக முதல்வர், இந்திராவுக்கு குமார் அனுதாபச் செய்தி!

(யாழ்ப்பாணம்)

''சென்னை விமான நிலையக் குண்டு வெடிப்பில் இறந்தவர்கள் எந்தத்தேசத்தவர்களாணுலும், மதத்தவர்களாணுலும், அவர்களின் மரணம் குறித்து எமது அனுதாபங்கள்'' என்று அகிலஇலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சிச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரனுக்கும், இந்தியப்பிரதமர் திருமதி. இந்திரா காந்திக்கும் அனுதாபத் தந்திகளை அனுப்பிவைத்துள்ளார்.

அவர்தமது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது: ''தங்கள் விமானநிலையத்தில் தேவையற்ற காரணத்தின் நிமித்தம் நிகழ்ந்த கொடூரகுண்டு வெடிப்புச்சம்பவத்திஞல் உயிரிழந்தவர்களின் குடும்பத்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் இலங்கைத்தமிழ் பேசும்மக்கள் சார்பிலும், அகில இலங்கைத்தமிழ்க்காங்கிரஸ் சார்பிலும் எமது ஆழ்ந்தகவலையைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

(கி)

## 150 உறவினர்கள் சென்னை பயணம்

(கொழும்பு)

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தின் போது பலியான இலங்கையர்களின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளும் பொருட்டு அவர்களின் உறவினர்கள் 150 பேரை ஏற்றிக் கொண்டு எயர்லங்கா விமானம் இன்று சென்னை செல்லவுள்ளது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 2! இலங்கையர் பலியாகியுள்ளனர். இவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று சென்னையில் நடைபெறவுள்ளது. (வெ)

## கொழும்பு பஸ் சேவை இல்லை!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றிரவு கொழும்பிற்கு தனியார் பஸ் சேவை எதுவும் நடைபெறவில்லை. கொழும்பிலிருந்து நேற்றிரவு யாழ். நகருக்கு இரு பஸ்கள் மட்டும் புறப்பட்டதாகக் கூறப்படுகிறது. [க]

## மீனம்பாக்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'திருமதிஏக்கநாயக்கா என்ற இலங்கை பெண்ணெருவரும் காயமடைந்து சிகிச்சை பெறுகிறுர். இவர் விமான நிலையத்தில் அபுதாபி செல்வதற்கான இணைப்பு விமானமொன்றுக்காகக் காத்து நின்றுர். தாம் மலசலகூடத்துக்குச் செல்வதற்கு எழுந்த போது குண்டு வெடித்ததாகக் கூறுகிறுர். இவரது கண்ணில் கண்ணுடித் துண்டொன்றிஞல் கீறல்காயம் ஏற்பட்டுள்ளது.

மீனம்பாக்கம் விமான நிலையச் சுற்றுடலில் இருந்த விமான நிலைய ஊழியர்களின் இல்லங்களும் குண்டு வெடிப்புச் சத்தத்திஞல் ஒரு கணம் அதிர்ந்தன. அத்துடன் அவர்களின் வீட்டு ஜன்னல் கண்ணுடிகள், கதவுகள் என்பனவும் நொருங்கி, உடைந்தன.

விமான நிலையத்தைச் சூழவர 68 ஆயிரம் சதுர அடிப் பிரதேசத்துக்கு கண்ணுடித் துணடுகளும், கட்டிட இடிபாடுகளின் சிதைவுகளும் சிதறுண்டு பரவியிருக்கக் காணப்பட்டன. (கி)

## குண்டு வெடிப்பில் காயம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்று பிற்பகல் நடந்த குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் காயமடைந்த ?ம்மனுவேல் என்பவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மற்றும் சிலருக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ளது. இவர்கள் சிகிச்சை பெற்றபின் திரும்பியுள்ளனர்.

பருத்தித்துறையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த ரவிச்சந்திரன் என்பவரும் பலத்தகாயத்துடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [க]

## குருப்பட்டம்

[கரவெட்டி]

யாழ். பேராலயத்தில் புதிதாக குருப்பட்டம் பெற்ற அருட்திரு. ஞேமான் நேசராசா தமது பிறப்பிடமான ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை செவ்வாய் முதல் பூசையை நிறைவேற்றுவார். பூசைமுடிவில்அவருக்கு பொது வரவேற்பு ஒன்றும் அளிக்கப் படும்.

## யாழ்.நகரை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாக்கி குண்டுகள் துளைத்த அடையாளம் காணப்படுகிறது வீதியோரங்களில், வெற்று சன்னங்கள் அங்குமிங்குமாக காணப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில், இரண்டு குண்டுகள்வெடித்ததைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுக் சத்தங்கள் பரவலாக யாழ் நகர் எங்கும் ஒலித்தது. இதனைத் தொடர்ந்து நகரம் நடுங்கும்வகையில் குண்டுகள் வெடித்தன. வாகனங்களில் சென்றுகொண்டே ஆகாயத்தை நோக்கி சுட்டுக் கொண்டு சென்றனர்.

நேற்றுக்காலை ஏற்பட்ட பதட்ட நிலைதணிந்து நண்பகலுக்குப் பின்னர் மீண்டும் பஸ்சேவை நடைபெற்றது.

சிலகடைகள் ஒற்றைக் கதவில் திறந்திருந்தன. குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து மீண்டும்கடைகள் மூடப்பட்டன. பஸ்கள். வ. போ. ச. பஸ்கள், டாக்ஸிகள் யாவும் பஸ் நிலையத்திலிருந்து திடீரென புறப்பட்டுச் சென்றன.

பஸ் நிலையத்தில் நின்ற பொதுமக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினுர்கள்.

யாழ். நகர் வந்த வெளியூரைச்சேர்ந்தவர்கள் வீடுதிரும்ப முடியாமல் கஷ்டப்பட்டனர். நேற்றிரவு 6 மணிவரை, துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. அதன் பின்னர் பயங்கர அமைதி நிலவியது.

பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் கந்தசாமிகோவிலில் நின்றவர்க ‹ வெடிச்சத்தம்கேட்டு வீடுகளை நோக்கிசென்றனர். (க)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.